# நாம் மாபெரும் வேலை செய்துகொண்டிருக்கிறோம்

Transcribed from a message spoken on November 1, 2015

By *R.S.Milton*

தேவன் தம்முடைய பிள்ளைகளைக்குறித்து ஒருநாளும் சலிப்படைவதில்லை. "எவ்வளவு நாள் நான் உங்களோடு பொறுமையாயிருப்பது? இனிமேலும் என்னால் உங்களோடு பொறுமையாயிருக்க முடியாது," என்று தேவன் தம்முடைய மக்களைக்குறித்து ஒருநாளும் சலிப்படைவதில்லை. தேவன் தம்முடைய மக்களிடத்தில் ஒருநாளும் சலிப்போ, விரக்தியோ அடைவதில்லை. தேவன் சிட்சிப்பார்; ஆனால் அது சலிப்பினாலோ, விரக்தியினாலோ அல்ல; தேவன் அன்பினால்தான் சிட்சிக்கிறார் என்று எபிரெயர் 12ஆம் அதிகாரத்திலே தெள்ளத்தெளிவாக எழுதியிருக்கிறது. தேவன் சலிப்படைந்து, விரக்தியடைந்து சிட்சிப்பதில்லை.

இப்போது நாம் பாடின எல்லாப் பாடல்களின் அடிப்படையில் இன்றைக்கு நான் ஒரு காரியத்தைப் பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன். *நாம் தேவனுடைய ஆடுகளைத் தேடிச் செல்ல வேண்டும்* என்ற ஒரு பாடலையும், *பிறரை மீட்க நிந்தை சுமந்து துன்புற்ற உம்போல் ஆவேனாக* என்ற பாடலையும், பிறகு *இயேசுவே நம் ஒரே மேய்ப்பர்* என்ற பாடைலையும் பாடினோம். இந்தப் பாடல்கள்மூலமாக "சரி, இன்றைக்கு நாம் இந்த சிந்தனையை, இந்த எண்ணத்தை, இந்தக் கருத்தைப் பகிர்ந்துகொள்வது ஏற்புடையது," என்று நான் சில சமயங்களில் நிதானித்துக்கொள்வது வழக்கம். அதுபோல இன்றைக்கும் நான் அப்படி நிதானித்துக்கொண்டேன்.

## நித்திய மதிப்புடைய வேலை

*தேவனுடைய மக்களாகிய நாம் ஒரு மாபெரும் வேலையைச் செய்துகொண்டிருக்கிறோம்.* நித்திய மதிப்புடைய அல்லது நித்தியத்தில் ஒரு பாதிப்பை உண்டாக்கக்கூடிய ஒரு மாபெரும் வேலையை நாம் செய்துகொண்டிருக்கிறோம். உங்களில் பலருக்கு அப்படிப்பட்ட ஒரு எண்ணம் ஒருவேளை தோன்றாமல் போகலாம் அல்லது இதுவரை தோன்றியிருக்காமல் இருக்கலாம். "அப்படியொன்றும் நாம் மாபெரும் வேலையைச் செய்துகொண்டிருப்பதாக நான் நினைக்கவில்லை. ஞாயிற்றுக்கிழமை ஏதொ கூடுகைக்கு வருகிறேன். மற்றபடி வாரத்தின் ஆறு நாட்களும் நம்முடைய குடும்பம், நம்முடைய வேலை என்று நம்முடைய பொறுப்புகளே நம்மை வெள்ளம்போல் அடித்துக்கொண்டு போய்விடுகிறது. இதிலென்ன நாம் மாபெரும் வேலையைச் செய்துகொண்டிருக்கிறோம். மற்ற மனிதர்கள் செய்யாத எந்த மாபெரும் வேலையைச் செய்துகொண்டிருக்கிறோம? நான் ஒன்றும் சிறப்பான மாபெரும் வேலையைச் செய்துகொண்டிருக்கவில்லை," என்று ஒருவேளை நாம் நினைக்கலாம். இல்லை இந்த யுகத்திலே, இந்தக் காலகட்டத்திலே நாம் ஒரு மாபெரும் வேலையைச் செய்துகொண்டிருக்கிறோம். மாபெரும் வேலை என்றால் நித்திய மதிப்புடைய ஒரு வேலை, நித்தியத்திலே ஒரு பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய வேலை, தேவனுடைய பார்வையிலே மிக முக்கியமான, மிக அருமையான, மிக மதிப்பு வாய்ந்த ஒரு வேலை. அதில் நாம் ஈடுபட்டிருக்கிறோம். "நீங்கள் வாழ்ந்துகொண்டிருக்கிற வாழ்க்கையும், நீங்கள் செய்துகொண்டிருக்கிற செய்கையும் அப்படியொன்றும் அவ்வளவு முக்கியமானது அல்ல. நீங்கள் ஒன்றும் பெரிதாக சாதிக்கவில்லை அல்லது சாதிக்கப்போவதும் இல்லை," என்பது பிசாசின் ஒரு தந்திரம்.

இந்த சிந்தனையை உங்கள் இருதயங்களிலே பதிப்பதற்காக நான் ஒரு வசனத்தை வாசிக்க விரும்புகிறேன். "அப்பொழுது நான் அவர்களிடத்திற்கு ஆட்களை அனுப்பி: நான் பெரிய வேலையைச் செய்கிறேன், நான் வரக்கூடாது: நான் அந்த வேலையைவிட்டு உங்களிடத்திற்கு வருகிறதினால் அது மினக்கட்டுப்போவானேன் என்று சொல்லச்சொன்னேன்" (நெகே. 6:3). *நான் ஒரு பெரிய வேலையைச் செய்கிறேன்.* இந்த சிந்தனையை உங்கள் இருதயங்களிலே நான் பதிக்க விரும்புகிறேன். நெகேமியா தான் செய்துகொண்டிருக்கிற வேலையைப்பற்றி சொல்லும்போது, "நான் ஒரு பெரிய வேலையைச் செய்கிறேன்; ஆகையால், நான் வர முடியாது. நான் அந்த வேலையை விட்டுவிட்டு வருகிறதினால் அந்த வேலை மினக்கெடுவானேன் அல்லது பாதிக்கப்படுவானேன், தடைபடுவானேன்" என்று சொல்லுகிறார்.

நான்கு குறிப்புகளை நான் உங்களோடு பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன். *முதலாவது, நாம் கட்டியெழுப்பிக்கொண்டிருக்கிறோம்.* "காலையில் எழுந்ததுமுதல் நம்முடைய தொழில், நம்முடைய அலுவலகம், நம்முடைய குடும்பம், நம்முடைய மனைவி பிள்ளைகள் என்று ஓடிக்கொண்டிருக்கிற நாம் பெரிய வேலையை செய்துகொண்டிருக்கிறோமா?" என்று நீங்கள் நினைக்கலாம். முதலாவது, நாம் கட்டியெழுப்பிக்கொண்டிருக்கிறோம். *இரண்டாவது, குறைச்சல்களைப் பூர்த்திசெய்வது.* அதன் பொருள்

என்னவென்று நான் கொஞ்சம் விளக்குகிறேன். குறைச்சல்களைப் பூர்த்திசெய்வோம். *மூன்றாவது, இசைந்து வாழ்வோம். நான்காவது, ஆவியில் கட்டியெழுப்புகிறோம்.* நான்கு குறிப்புகள். முதலாவது, *கட்டியெழுப்பிக்கொண்டிருக்கிறோம்.* இரண்டாவது, *குறைச்சல்களைப் பூர்த்திசெய்வோம்.* மூன்றாவது, *இசைந்து வாழ்வோம், செயல்படுவோம்.* நான்காவது, *ஆவியில் கட்டியெழுப்பப்படுவோம்.*

**தரிசனத்தால் ஆளுகைசெய்யப்படுதல்**

ஒரு கதை சொல்கிறேன். சில மனிதர்கள் கல் உடைத்துக்கொண்டிருந்தார்கள். அந்த வழியிலே நடந்து போன ஒரு மனிதன், இவர்கள் எதற்காக கல் உடைத்துக்கொண்டிருக்கிறார்கள் என்று தெரிந்துகொள்ள விரும்பினான். கல் உடைத்துக்கொண்டிருக்கிற ஒரு மனிதனைப் பார்த்து, "எதற்காக நீ கல் உடைத்துக் கொண்டிருக்கிறாய்?" என்று கேட்டான். அந்த மனிதன், "இன்றைக்கு என்னுடைய வயிற்றுப்பாட்டிற்காக, என்னுடைய சாப்பாட்டிற்காக, என்னுடைய உணவிற்காக நான் கல் உடைத்துக்கொண்டிருக்கிறேன்," என்று சொன்னான். சற்று தூரம் அப்பால் கல் உடைத்துக்கொண்டிருந்த இன்னொரு மனிதனைப் பார்த் தான். அவனிடம், "எதற்காக நீ கல் உடைத்துக்கொண்டிருக்கிறாய்?" என்று கேட்டான். "என்னுடைய குடும்பத்தைக் காப்பாற்றுவதற்காக, என்னுடைய பிள்ளைகளைக் காப்பாற்றுவதற்காக, அவர்களுக்கு ஒரு எதிர்காலத்தை உருவாக்குவதற்காக நான் கல் உடைத்துக்கொண்டிருக்கிறேன்," என்று சொன் னான். இன்னும் சற்றுத் தூரம் தள்ளிப்போய் வேறொரு இடத்திலே கல் உடைத்துக்கொண்டிருந்த இன் னொரு மனிதனைப் பார்த்து அதே கேள்வியைக் கேட்டான். "நீ எதற்காக கல் உடைத்துக்கொண் டிருக்கிறாய்?". அவன், "எங்கள் அரசர் மாபெரும் தியாகம் செய்து ஒரு பெரிய போரிலே வெற்றி பெற்றிருக்கிறார். அரசர் மட்டுமல்ல. இந்த நாட்டின் குடிமக்கள் எல்லாம் சேர்ந்து ஒரு போரிலே வெற்றி பெற்றிருக்கிறார்கள். அந்த வெற்றியின் நினைவுச்சின்னமாக அதில் செய்யப்பட்ட தியாகங்கள், போராட் டங்கள், வெற்றி இவையெல்லாவற்றையும் வரப்போகிற தலைமுறைகளுக்கு அறிவிப்பதற்காக, பிர கடனப்படுத்துவதற்காக, பறைசாற்றுவதற்காக ஒரு நினைவுச்சின்னத்தை, ஒரு நினைவு மண்டபத்தை நான் கட்டிக்கொண்டிருக்கிறேன்," என்றான்.

இந்தக் கதையைச் சொல்வதில் நான் வருத்தப்படவே இல்லை. பொதுவாக நான் கதை சொல்வதற்கு வருத்தப்படுவேன். சில சமயங்களில் என்னைவிட வயதானவர்கள், எண்பது வயதையுடைய பரிசுத்த வான்கள் சிலர் இங்கு இருப்பதுபோல் நான் கற்பனை செய்துகொள்வது உண்டு. எதற்கென்றால் அப் பொழுதுதான் நாம் பேசுவதில் ஒரு கட்டுப்பாடு இருக்கும். பேசி முடித்தபிறகு நம்மை இடித்துரைப் பதற்கு இரண்டு பேர் இருக்கவேண்டும் இல்லையா?

மூன்று மனிதர்களும் கல்தான் உடைத்துக்கொண்டிருந்தார்கள். எதற்காகக் கல் உடைக்கிறோம் என் கிற தரிசனம் மூன்றாவது மனிதனுக்கு மட்டும்தான் இருந்தது. இந்தக் கதை சொல்கிற அல்லது வலி யுறுத்துகிற கருத்து என்னவென்று உங்களுக்குப் புரிகிறதா? நம்முடைய வாழ்க்கை, நம்முடைய செயல் அனைத்தும் ஒரு தரிசனத்தினால் ஆளுகை செய்யப்பட வேண்டும். "என் வயிற்றுப்பாட்டிற்காக கல் உடைக்கிறேன்," என்பது தரிசனமல்ல. அது உண்மைதான். ஆனால், அது தரிசனத்தினால் ஆளுகை செய்யப்படுவது அல்ல. "என் குடும்பத்தைக் காப்பாற்றுவதற்காக, பிள்ளைகளுடைய கல்விக்காக, அவர்களுடைய எதிர்காலத்திற்காக நான் கல் உடைக்கிறேன்," என்பதும் உண்மைதான். ஆனால் அது தரிசனத்தினால் ஆளுகை செய்யப்படுவது அல்ல. "இந்த நாட்டின், எங்கள் அரசனின் தியாகத்தினால் பெற்ற வெற்றியை தலைமுறை தலைமுறைதோறும் அறிவிப்பதற்காக, பறைசாற்றுவதற்காக ஒரு நினைவு மண்டபம், ஒரு நினைவுச்சின்னம் கட்டியெழுப்பிக்கொண்டிருக்கிறோம்," என்பது தரிசனத் தினால் ஆளுகைசெய்யப்பட்டுச் செய்வது. அப்படிச் செய்யும்போது நம்முடைய வயிற்றுப்பாட்டிற்கு உணவு கிடைக்கிறதா, கிடைக்கவில்லையா? கிடைக்கிறது. நம்முடைய குடும்பம் ஆசீர்வதிக்கப்படு கிறதா, ஆசீர்வதிக்கபடவில்லையா? ஆசீர்வதிக்கப்படுகிறது. என் பிள்ளைகளுக்கு நல்ல எதிர்காலத்தை உருவாக்குகிறோமா, உருவாக்கவில்லையா? உருவாக்குகிறோம். ஆனால், காரியம் அதுவல்ல. எந்தத் தரிசனத்தோடு நம்முடைய வாழ்க்கை ஆளப்படுகிறது என்பதுதான் காரியம்.

நாம் படிக்கிறோம், வேலை பார்க்கிறோம், குடும்ப வாழ்க்கை நடத்துகிறோம். ஆனால் நம்மை ஆளுகைசெய்வது அவையல்ல. ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து சொன்னார். நோவாவின் காலத்தில் நடந்ததுபோல மனித குமாரன் வருகிற நாட்களிலும் நடைபெறும். ஜனங்கள் புசித்தார்கள், குடித்தார்கள்; விற்றார்கள், வாங்கினார்கள்; கட்டினார்கள், நட்டினார்கள்; பெண் கொண்டார்கள், பெண் கொடுத் தார்கள்; வெள்ளம் வந்து அவர்களை வாரிக்கொண்டுபோகும்வரை அவர்கள் அறியாதிருந்தார்கள். ஒரு கேள்வி எழுப்புகிறேன். நோவாவின் காலத்தில் மக்கள் செய்ததாகச் சொல்லப்படுகின்ற செயல்கள் ஏதாவது பாவமான செயல்களா? ஜனங்கள் புசித்தார்கள். புசிப்பது பாவமா? குடித்தார்கள். குடிப்பது பாவமா? விற்றார்கள், வாங்கினார்கள். அது பாவமா? பெண் கொண்டார்கள், பெண் கொடுத்தார்கள்.

அது பாவமா? ஏன் வெள்ளம் வந்து அவர்களையும் வாரிக்கொண்டுபோனது? நம்முடைய வாழ்க்கையின் செயல்கள் எதுவும் உள்ளார்ந்த விதத்திலே பாவம் உள்ளதுபோல் தோன்றவில்லை. ஆனால், இந்த வாழ்க்கை தேவனுடைய தரிசனத்தினால் ஆளப்படவும் இல்லை. மனித வாழ்க்கையின் அன்றாட நிகழ்ச்சிகளும், பொறுப்புகளும், செயல்பாடுகளும் தேவனுடைய தரிசனத்துக்கு முரணானதா அல்லது தேவனுடைய தரிசனத்தோடு இசைந்து அவைகளைச் செய்ய முடியுமா? புசிப்பது, குடிப்பது, விற்பது, வாங்குவது, நட்டுவது, கட்டுவது, பெண் கொள்வது, பெண் கொடுப்பது இவைகளெல்லாம் தேவனுடைய தரிசனத்துக்கு முரணானதா அல்லது தேவனுடைய தரிசனத்துக்கு இசைந்ததாக இவைகளை மாற்றிக்கொள்ள முடியுமா? இசைந்ததாக மாற்றிக்கொள்ள முடியும். தேவனுடைய தரிசனத்துக்கு முரணாக்கவும் முடியுமா? முரணாக்கவும் முடியும். இரண்டு வாழ்க்கைகளும் பார்ப்பதற்கு ஒன்றுபோல் தோன்றும். ஆனால், ஒன்று தேவனுடைய தரிசனத்துக்கு முரணான வாழ்க்கை. இன்னொன்று தேவனுடைய தரிசனத்துக்கு ஒத்த வாழ்க்கை.

## 1. கட்டியெழுப்பிக்கொண்டிருக்கிறோம்

என்னுடைய முதல் குறிப்பைக் கூறுகிறேன். தேவனுடைய மக்களாகிய நாம் தேவனுடைய பார்வையிலே அருமையான, மதிப்புள்ள, முக்கியத்துவம் வாய்ந்த, சாவாவாழ்வா என்னும் அளவுக்கு முக்கியத்துவம்வாய்ந்த ஒன்றைக் கட்டியெழுப்பிக்கொண்டிருக்கிறோம். தொன்றுதொட்டு யுகங்கள்தோறும், கால கட்டங்கள்தோறும் தேவன் தம் மக்களுக்கு அப்படிப்பட்ட பொறுப்பை வழங்கியிருக்கிறார். தேவனால் இருதயம் பிரகாசிப்பிக்கப்பட்ட மக்கள் அந்தப் பொறுப்புகளை தங்கள் சிரமேற்கொண்டு தங்கள் வாழ்க்கையின் முதன்மையான பொறுப்பாக, வேலையாக அவைகளை நிறைவேற்றியிருக்கிறார்கள்.

ஒரு பேழையைக் கட்டுகிற பொறுப்பை தேவன் நோவாவுக்குக் கொடுத்தார். பேழையைக் கட்டுவது என்பது ஒரு நாளிலே நடந்துமுடிகிற காரியம் இல்லை. பேழை என்றால் பெட்டி. பல ஆண்டுகள் அவனும் அவன் குடும்பமுமாக அந்த பேழையைக் கட்டுகிறான். ஏழுபேராக அந்தப் பேழையைக் கட்டுகிறார்கள்.

தாவீது தேவாலயம் கட்டுவதற்கானப் பொருட்களைச் சவதரித்தான், சம்பாதித்தான், சேகரித்துவைத்தான் என்று நாம் வாசிக்கிறோம். தாவீதினுடைய மகனான சாலொமோன் தேவனுடைய ஆலயத்தைக் கட்டுகிறான்.

நெகேமியா எருசலேமின் மதிலைக் கட்டுகிறான். அப்படிக் கட்டும்போது நெகேமியா சொல்கின்ற ஒரு வாக்கியத்தைத்தான் நாம் வாசித்தோம். எருசலேமின் மதிலைக் கட்டுவதற்கு எதிரான சில பகைஞர்கள் நெகேமியாவிடம் ஆள் அனுப்பி, "நீர் வாரும். நாம் கிராமங்கள் ஒன்றிலே கலந்தாலோசிப்போம்," என்று அவனைக் கூப்பிடுகின்றார்கள். அப்பொழுது நெகேமியா சொல்கின்ற பதில்தான் இது. "நான் பெரிய வேலையைச் செய்கிறேன். இன்னும் அந்த வேலை முடியவில்லை. மதில் கட்டப்பட்டாயிற்று. ஆனால், வாசல்களுக்கு நான் இன்னும் கதவுகள் வைக்கவில்லை. என்னுடைய வேலையை அறைகுறையாக விட்டுவிட்டு உங்களிடத்தில் வந்து கலந்தாலோசிக்க விரும்பவில்லை". நான்குமுறை இப்படி ஆள்மூலம் சொல்லி அனுப்புகிறார்கள். நான்குதடவையும், "நான் அப்படியே பதிலுரைத்தேன். நான் பெரிய வேலை செய்கிறேன். நான் வந்தால் இந்த வேலை மினக்கெட்டுவிடும். ஆகையால் என்னால் வர முடியாது".

## தேவனுடைய மக்களுக்கிடையேயுள்ள உறவு

இந்தப் புதிய ஏற்பாட்டிலே தேவனுடைய மக்களாகிய நாம் கிறிஸ்துவின் சரீரத்தைக் கட்டியெழுப்பிக்கொண்டிருக்கிறோம். கிறிஸ்துவின் சரீரம் என்பது ஏதோ abstract ஆன ஒன்று அல்ல. நிச்சயமாக நாம் கண்களால் பார்க்கிற கிறிஸ்துவின் சரீரம் என்பது ஓர் உயிரற்ற, ஜடப்பொருளான கட்டிடம் அல்ல. கிறிஸ்துவின் சரீரம் என்பது நாம் அடிக்கடி சொல்லியிருப்பதுபோல *தேவனுடைய மக்கள் ஆவியில் ஒருவரோடொருவர் கொண்டுள்ள உறவுப்பாடு.* The spiritual relatedness of believers in Christ. *கிறிஸ்துவிலுள்ள விசுவாசிகள் அல்லது தேவனுடைய மக்கள் ஆவிக்குரிய விதத்தில் அல்லது ஆவியில் ஒருவரோடொருவர், ஒருவருக்கொருவர் கொண்டுள்ள அந்த தொடர்பு, உறவுப்பாடு, உறவுக்கு பெயர்தான் கிறிஸ்துவின் சரீரம்.*

இதை விளக்குவதற்காக நான் உங்களுக்கு ஒரு சின்ன உவமையைச் சொல்கிறேன். தேனீக்கள் சேர்ந்து ஒரு தேன்கூட்டைக் கட்டுவது ஒரு நல்ல உவமை. உவமைகளைக்கூட நாம் மிகவும் நேர்த்தியாக தெரிந்தெடுக்க வேண்டும். சில சமயங்களிலே உவமைகளைச் சொல்வது சில காரியங்களை விளக்குவதற்கு மிகவும் உதவியாக இருக்கும். பல நூறு அல்லது ஆயிரம் தேனீக்கள் சேர்ந்து ஒரு தேன்

கூட்டைக் கட்டுகின்றன. ஒவ்வொரு தேனீயினிடத்திலும் தேன் இருக்கிறது. தேன் இல்லாத தேனீக்கள் தேன்கூட்டைக் கட்டியெழுப்ப முடியாது. “நூறு பேரும் பறக்கிறார்கள். அப்படியே நானும் கூடப் பறந்து தேன்கூட்டிலே தேனைச் சேர்ப்பதுபோல ஒரு படம் காட்டிக்கொள்கிறேன்,” என்று எந்தத் தேனீயும் தேன்கூட்டைக் கட்டியெழுப்ப முடியாது. ஒவ்வொரு தேனீயும் தேனைச் சேகரித்துக் கொண்டுவந்து, எல்லாத் தேனீக்களும் சேர்ந்து அந்தக் கூட்டைக் கட்டியெழுப்புகின்றன.

அதுபோல, நாமெல்லாரும் நம் அன்றாட வாழ்விலே எல்லாச் சம்பவங்களிலும், நிகழ்ச்சிகளிலும், சோதனைகளிலும், பரீட்சைகளிலும், துன்பங்களிலும், பாடுகளிலும், சவால்களிலும், போராட்டங்களிலும் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவால் வாழ்கிறோம். அதன்மூலமாக கிறிஸ்துவை ஓரளவு நமக்குள் சேகரித்துக்கொள்கிறோம். அப்படி நாம் சேகரித்த கிறிஸ்துவை நாம் ஒருவருக்கொருவர் பரிமாறு கிறோம். இந்தத் தேன்கூடு யாரால் தொகுக்கப்பட்டிருக்கிறது? தேவனுடைய மக்கள் எல்லாரும் ஒருவ ரோடொருவர் தொடர்புகொண்டு, உறவுகொண்டு, ஐக்கியம்கொண்டு வாழ்கிற இந்த வாழ்க்கைதான் தேன்கூடு. நான் அனுபவித்த, எனக்குள் உருவாக்கப்பட்டிருக்கிற கிறிஸ்துவை நாம் ஒருவருக்கொருவர் பகிர்ந்துகொடுக்கிறோம், ஒருவருக்கொருவர் பரிமாறுகிறோம். ஒருவருக்கொருவர் நாம் கொடுக்கவும், வாங்கவும் செய்கிறோம்.

### கிறிஸ்துவின் சரீரத்தைக் கட்டியெழுப்புகிறோம்

இது இன்றைக்கு பரிசுத்த ஆவியானவர் இந்தப் பூமியிலே கட்டியெழுப்பிக்கொண்டிருக்கிற ஒரு மாபெரும் கட்டிடம். ஆனால் இது உயிரில்லாத, ஜடப்பொருளான ஒரு கட்டிடம் இல்லை. உயிருள்ள ஒரு கட்டிடம். தேன்கூட்டை நீங்கள் பார்த்திருப்பீர்கள். தேனையெல்லாம் எடுத்து முடித்தபிறகு காய்ந்த ஒரு தேன்கூட்டைப் பார்த்தால் அதுவும்கூட ரொம்ப அழகாக இருக்கும். Hexagon வடிவத்திலே இருக் கும். மனிதர்கள் அப்படிப்பட்ட ஒரு தேன்கூட்டைச் செய்ய முடியாது. ஒரு தேன்கூட்டைக் கட்டுவதிலே அவைகளுக்கிடையே சண்டை ஏற்படுகிறதா, சச்சரவுகள் ஏற்படுகிறதா என்று எனக்குத் தெரியாது. “நான் நிறைய தேன் கொண்டு வந்தேன். நீ குறையக் கொண்டுவந்தாய்,” என்பதுபோன்ற ஒப்பீடுகள் இருக்கிறதா, இல்லையா என்றும் எனக்குத் தெரியாது. ஆனால், அவைகள் ரொம்ப இசைவாக வாழ்ந்து, உழைத்து அப்படிப்பட்ட ஒரு தேன்கூட்டைக் கட்டியெழுப்புகின்றன.

நம்முடைய வாழ்க்கை முழுவதையும் நாம் எதற்காக அர்ப்பணித்திருக்கிறோம்? முன்பு நாம் இந்து வாகவோ அல்லது பாரம்பரிய கிறிஸ்தவனாகவோ இருந்தபோது ஞாயிற்றுக்கிழமை தேவாலயங்களுக் கும், கோவில்களுக்கும் சென்றோம். இப்பொழுது நாம் ஞாயிற்றுக்கிழமை இப்படிப்பட்ட ஒரு கூடு கைக்கு வருகிறோம். இதில் நாம் பெரிதாக எதையும் சாதித்துவிடவில்லை. நம்முடைய பழக்கத்தின் காரணமாக, பாரம்பரியத்தின் காரணமாக நாம் இப்படி சாமி கும்பிட, அல்லது கோவிலுக்கு வரு கிறோம். “சாமி கும்பிடப் போகிறேன் அல்லது கோயிலுக்குப் போகிறேன்,” என்பது தமிழ்நாட்டிலே எல்லாருக்கும் தெரியும்.

நம் ஞாயிற்றுக்கிழமை கூடுகை அப்படிப்பட்டதல்ல. நாம் ஞாயிற்றுக்கிழமை கூடிவருவது நம் கூட்டு வாழ்க்கையின் ஒரு சிறிய பகுதி. நான் இந்தக் கூடுகையை மிகவும் அருமையானதாகக் கருதுகிறேன். நம்முடைய கூட்டு வாழ்க்கையின் மிக ஒரு முக்கியமான பங்காக இந்தக் கூடுகைகளை நான் கருது கிறேன். ஆனால், அதே சமயத்தில் நம்முடைய கூட்டு வாழ்க்கை என்பது கூடுகையோடு தொடங்கி கூடுகையோடு முடிந்துவிடுவது இல்லை. நாம் ஒரு பெரிய வேலையைச் செய்துகொண்டிருக்கிறோம். தேனீக்களெல்லாம் எப்படித் தேனைச் சேகரித்து தேன் கூட்டிலே பரிமாறுகின்றனவோ, அதுபோல ஒவ்வொரு நாளும் நம்முடைய வாழ்க்கையிலும், சகோதரர்களோடும் அல்லது தேவனை அறியாத மக்களோடும் நாம் இடைப்படும்போது நாம் கிறிஸ்துவைச் சேகரிக்கிறோம்; கிறிஸ்துவை ஒருவருக் கொருவர் பரிமாறிக்கொள்கிறோம்.

### புதிய எருசலேம்

இன்றைக்கு நாம் கட்டியெழுப்பிக்கொண்டிருக்கிற *கிறிஸ்துவின் சரீரம்* என்றழைக்கப்படுவது இந்த யுகத்தின் முடிவிலே, திருவெளிப்பாடு 20, 21, 22ஆம் அதிகாரங்களிலே பார்ப்பதுபோல், புதிய எருச லேம் அல்லது கிறிஸ்துவின் மணவாட்டி என்றழைக்கப்படுகிறது. கிறிஸ்துவின் சரீரம், கிறிஸ்துவின் மணவாட்டி, புதிய எருசலேம் என்று அழைக்கப்படுகிற யாவும் ஒன்றே.

தேவனுடைய மக்கள் ஒருவரோடொருவர் உறவுபட்டு, உறவுகொண்டு, ஐக்கியங்கொண்டு வாழ்கிற ஒரு வாழ்க்கைதான் கிறிஸ்துவின் சரீரம் என்று சொன்னேன். நாம் ஏன் உறவுபட்டு, உறவுகொண்டு, ஐக்கியங்கொண்டு வாழ வேண்டும்? நாம் ஒருவருக்கொருவர் கிறிஸ்துவைப் பரிமாறுவதற்காக, பகிர்ந்துகொள்வதற்காக அப்படிப்பட்ட வாழ்க்கை வாழ்கிறோம். இதனுடைய முடிவு கிறிஸ்துவின் மண

வாட்டி அல்லது புதிய எருசலேம் என்றழைக்கப்பட்டிருக்கிறது. புதிய எருசலேம் தேவனிடத்திலிருந்து பரலோகத்தைவிட்டு இறங்கிவருகிறதையும், அது தன்னுடைய மணவாளனுக்காக அலங்கரிக்கப்பட்ட ஒரு மணவாட்டியைப்போல ஆயத்தமாக்கப்பட்டிருந்தது என்றும் நாம் திருவெளிப்பாடு 20. 21, 22 ஆம் அதிகாரங்களிலே வாசிக்கிறோம். தேவனிடத்திலிருந்து பரலோகத்தைவிட்டு தன்னுடைய மணவாளனுக் காக அலங்கரிக்கப்பட்ட ஒரு மணவாட்டியைப்போல இறங்கி வந்தது. இவைகளெல்லாம் வெறும் சித்தரங்கள்தான். வானத்திலிருந்து ஒரு நகரம் இறங்கி வருவதுபோலவோ, அதிலே ஒரு மணவாட்டி பறந்து வருவதுபோலவோ கற்பனை செய்துகொள்ள வேண்டாம்.

புதிய எருசலேம் என்பது தேவனுடைய மக்களாலான ஒரு சமுதாயம். அப்படிபட்ட ஒரு சமுதாயத்தை நாம் கட்டியெழுப்பிக்கொண்டிருக்கிறோம். இந்த சமுதாயம் கிறிஸ்துவால் அலங்கரிக்கப்பட்ட ஒரு சமு தாயமாக இருக்கும். ஒரு தேன்கூட்டின் எந்த அணுவை எடுத்துக்கொண்டாலும் அதில் இனிமை இருக் கும். அதுபோல தேவனுடைய மக்களாலான இந்தச் சமுதாயத்தில் தனிப்பட்ட வாழ்க்கை, கூட்டு வாழ்க்கை, அந்தரங்க வாழ்க்கை, பகிரங்க வாழ்க்கை அவர்களுடைய குடும்பம், காலைமுதல் மாலை வரை அவர்களுடைய வாழ்க்கையின் எந்தப் பகுதியை எடுத்துக்கொண்டாலும் அதில் கிறிஸ்துவின் இனிமையும், கிறிஸ்துவின் நறுமணமும் ஓடி நிரம்பி வியாபித்திருக்கும். நாம் சேகரிக்கிற கிறிஸ்துவும் அல்லது நாம் வாழ்கிற கிறிஸ்துவும், நாம் ஒருவருக்கொருவர் பரிமாறுகிற கிறிஸ்துவும் நாம் இந்த மணவாட்டியை அலங்கரிக்கிற கிறிஸ்துவாக மாறும். நம்முடைய சகோதர சகோதரிகளுக்கு ஒவ்வொரு நாளும் ஏதோவொரு சூழ்நிலையில் நாம் கிறிஸ்துவைப் பரிமாறுவது, நாம் கிறிஸ்துவைக்கொண்டு அவர்களை அலங்கரிப்பதற்கு ஒப்பாகும்.

**உண்மையான அலங்காரம்**

உங்கள் பிள்ளைகளுக்கு நீங்கள் நகைகளெல்லாம் போட்டு வைத்திருக்கிறீர்கள். என்னுடைய தனிப்பட்ட கருத்தை நான் சொல்லிவிடுகிறேன். பொன்னால், வெள்ளியால், ஆபரணங்களால் பிள்ளை களை அலங்கரிப்பதை நான் ஒத்துக்கொள்வதில்லை. இது என்னுடைய கருத்து. என்னுடைய புரிந்து கொள்ளுதலின்படி புறம்பான அலங்கரிப்பு தேவனுடைய எண்ணம் அல்ல. தேவனுடைய வார்த்தை என்ன சொல்லுகிறது? பவுல் தீமோத்தேயுக்கு எழுதும்போது அதை எழுதுகிறார். பேதுருவும் அதை எழுதுகிறார். உண்மையான அலங்காரம் என்ன? "மயிரைப் பின்னி, பொன்னாபரணங்களை அணிந்து, உயர்ந்த வஸ்திரங்களை உடுத்திக்கொள்ளுதலாகிய அலங்கரிப்பு உங்களுக்கு அலங்கரிப்பாயிராமல், அழியாத அலங்கரிப்பாயிருக்கிற சாந்தமும் அமைதலுமுள்ள ஆவியாகிய இருதயத்தில் மறைந்திருக் கிற குணமே உங்களுடைய அலங்கரிப்பாயிருக்கக்கடவது; அதுவே தேவனுடைய பார்வையில் விலை யேறப்பெற்றது". "அப்படியானால் நாம் நம்மை அலங்கரிக்கக்கூடாதா?" என்று தேவனுடைய மக்கள் பல கேள்விகள் கேட்கலாம். நான் அந்த சர்ச்சைக்குள் போக விரும்பவில்லை.

ஆனால், தேவனுடைய பிள்ளைகள் ஒவ்வொருவருக்குள்ளும் அவருடைய நிலைக்கும், தேவைக்கும், குறைச்சலுக்கும் நாம் கிறிஸ்துவை வழங்கும்போதும், கிறிஸ்துவைக்கொண்டு நாம் அவர்களை அலங் கரிக்கிறோம். உண்மையாகவே நாம் ஒருவரையொருவர் அலங்கரிப்பது எப்படி என்று நாம் கற்றுக் கொள்ள வேண்டும். நாம் நம்முடைய சகோதர சகோதரிகளுடைய அல்லது தேவனை அறியாத மனித னுடைய வாழ்க்கையிலே கிறிஸ்து குறைவுபடும்போது எப்போதெல்லாம் நாம் கிறிஸ்துவை வழங்கு கிறோமோ, அப்போதெல்லாம் நாம் அவர்களை கிறிஸ்துவைக்கொண்டு அலங்கரிக்கிறோம். ஆ! இந்த யுகத்தின் முடிவிலே ஒன்றேவொன்றைப்பற்றித்தான் நாம் "மிகவும் அழகாக இருக்கிறது!" என்று சொல்லுவோம். எதைப்பற்றி தெரியுமா? புதிய எருசலேம்! அது எவ்வளவு அழகாயிருக்கிறது? அது தன் மணவாளனுக்காக அலங்கரிக்கப்பட்ட மணவாட்டியைப்போல இருக்கிறது என்று வர்ணிப்போம்.

சில கல்யாணங்களுக்குப் போகும்போது அங்கு வந்திருப்பவர்கள் மணப்பெண்ணின் சேலையைப் பற்றியும், அவள் அணிந்திருக்கிற நகைகளைப்பற்றியும் பேசுவதை நான் கேட்டிருக்கிறேன். இந்த அலங்காரங்களெல்லாம் அந்த நாளிலே குப்பையாகக் கருதப்படும். "குப்பையாகக் கருதப்படும் என்று நீங்கள் ரொம்ப அதிகமாகப் பேசுகிறீர்கள்," என்று நீங்கள் சொல்லலாம். பிலிப்பியர் 3ஆம் அதிகாரத் தில் பவுல் "எனக்கு லாபமாயிருந்தவைகள் எவைகளோ அவைகளைக் கிறிஸ்துவுக்கு நஷ்டமென்று எண்ணினேன்...குப்பையுமாக எண்ணுகிறேன்" என்று சொல்கிறார். நஷ்டமென்று சொல்லிவிட்டு மனதுக் குள்ளே "நான் ஒரு அப்போஸ்தலனாக இருப்பதால் இவைகளையெல்லாம் நஷ்டமாகக் கருதவேண்டி யிருக்கிறதே! எல்லாவற்றையும் நான் எடைபோட்டுப் பார்த்தபிறகு இது குப்பை என்று என்னுடைய கணக்கு சொல்லியது. ஆனால் என்னுடைய உணர்ச்சியோ *இல்லை, இல்லை.* இது அருமையானது என்று சொல்லியது" என்று அவர் சொல்லவில்லை. அப்படியல்ல. "கணக்குப்போட்டு பார்த்து *இது*

*குப்பை* என்று நான் கற்றுக்கொண்டேன். என்னுடைய உணர்ச்சிகளும் *இது குப்பைதான்* என்று சொல்கிறது" என்பதுதான் அவருடைய மதிப்பீடு.

நான் எச்சரிக்கையாய் பேசுகிறேன். ஏனென்றால், தேவனுடைய மக்கள் இதைத் தவறாக எடுத்துக் கொண்டு, நான் சொல்லாத சில கருத்துக்களை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டாம்.

கிறிஸ்துவை நாம் ஒருவருக்கொருவர் பரிமாறுவதுதான் உண்மையான அலங்கரிப்பு, உண்மையான ஜோடனை. கிறிஸ்து குறைவுபடுகிற வாழ்க்கையிலே நாம் கிறிஸ்துவை வழங்குவதுதான் உண்மை யான அலங்காரம். இது பெரிய திறமை. நாம் கட்டியெழுப்புகிற வேலையைச் செய்துகொண்டிருக் கிறோம். இது ஒரு கனமான பணி; ஏனோதானோவென்று செய்கிற வேலை அல்ல.

**2. தேவைகளையும், குறைகளையும் பூர்த்திசெய்தல்**

இரண்டாவது குறிப்பை நான் சொல்கிறேன். தேவைகளிலும், குறைச்சல்களிலும் உள்ள மக்கள் இந்த உலகத்திலே பல கோடி உண்டு. தேவனுடைய மக்களும், மிக முக்கியமாக தேவனற்ற மக்களும், பல கோடி உண்டு. "நான் சுகமானவனைத் தேடி வரவில்லை. வியாதிப்பட்டவனையே தேடி வந்தேன். சுக முள்ளவர்களுக்கு வைத்தியன் தேவையில்லை," என்று ஆண்டவர் சொல்கிறார். நம்முடைய வாழ்க்கை யில் நாம் சந்திக்கிற, குறுக்கிடுகிற, தேவன் இல்லாத மக்களுக்கு நாம் கிறிஸ்துவை வழங்க வேண்டும். அவர்கள் யாரும் ஓடி ஓடி வந்து, "கிறிஸ்துவைத் தா, கிறிஸ்துவைத் தா என்று கேட்பதில்லை," என்று நாம் சொல்லலாம். நம்முடைய பிள்ளைகள் ஓடிவந்து சாப்பாடு கேட்டால்தான் நாம் ஊட்டுவதில்லை. தேடித்தேடிப் போய் நாம் நம்முடைய பிள்ளைகளுக்கு சாப்பாட்டை ஊட்டுகிறோம். இல்லையா? அது தாயினுடைய உள்ளம். தேவனுடைய உள்ளமும் அதுதான். தங்களுடைய உண்மையான தேவை கிறிஸ்து ஒருவரே என்று இந்த உலகத்து மக்களுக்குத் தெரியாது. நிறைய பணம் கிடைத்துவிட்டால் அல்லது கிலோ கிலோவாக தங்கம் போட்டுவிட்டால் அல்லது பெரிய கார் வாங்கிவிட்டால் அல்லது குடித்தால் அல்லது கும்மாளம்போட்டால் தங்கள் வாழ்க்கை ரொம்ப மகிழ்ச்சியாகிவிடும் என்று அவர்கள் நினைக்கிறார்கள். அது அவர்களுடைய மதியீனம்.

மனிதனுடைய ஆழ்ந்த தேவையைப் பூர்த்திசெய்வது, நிறைவுசெய்வது, திருப்தியாக்குவது கிறிஸ்து மட்டுமே என்று பிரசங்கி புத்தகத்தில் சாலொமோன் சொல்கிறார். பிரசங்கி புத்தகத்திலே இயேசு கிறிஸ்துவைப்பற்றி ஒன்றும் சாலொமோன் எழுதவேயில்லை என்று நீங்கள் நினைக்கலாம். நன்றாய் வாசித்துப்பாருங்கள். பிரசங்கியின் புத்தகத்தில் சாலொமோன் இயேசுகிறிஸ்துவைப் பற்றித்தான் எழுதுகிறான்.

**ஒரே மந்தை**

தேவைகளையும், குறைச்சல்களையும் பார்க்கும்போது கிறிஸ்துவைக்கொண்டு அந்தத் தேவைகளை யும், குறைச்சல்களையும் நாம் பூர்த்திசெய்ய வேண்டும். பூர்த்திசெய்ய நாம் கற்றுக்கொள்ள வேண்டும். "உன் ஆடுகளின் நிலைமையை அறிந்துகொள். உன் மந்தையைக்குறித்துக் கவனமாயிரு" (நீதி *27:23*). "உன் ஆடுகளின் நிலைமையை நன்றாய் அறிந்துகொள், உன் மந்தைகளின்மேல் கவனமாயிரு". இந்த வசனத்தை நான் அடிக்கடி மேற்கோள் காட்டியிருக்கிறேன். கிறிஸ்தவத்திலே ஒரு தவறான கருத்து உண்டு. மந்தை, மேய்ப்பன் என்றவுடனே பாஸ்டர் ஒரு மேய்ப்பர் என்றும், மற்றவர்களெல்லாம் மந்தை என்றும் பலர் தவறாக நினைக்கிறார்கள்.

"அருள் ஏராளமாய் பெய்யும்" என்ற உலகப் பிரசித்திபெற்ற இசையில் நாம் ஒரு பாடல் எழுதியிருக் கிறோம்.

இயேசுவே, நம் ஒரே மேய்ப்பர்!
தம்முயிர் தந்த மீட்பர்!
தம் ஜீவன் நாம் பெற வந்தார்,
பூரணமாகத் தந்தார்.

> நாம் ஒரே மந்தை,
> தேவன் நம் அன்பின் தந்தை,
> ஜீவன் பெய்வதவர் சிந்தை,
> பாரில் பரம விந்தை!

நாம் ஒரே மந்தை; தேவனுடைய அன்பிற்குரிய மந்தை. இந்த மந்தையிலுள்ள ஆடுகளுக்குத் தெய்வீக ஜீவனைத் தருவது அவருடைய எண்ணம். இது இந்த உலகத்திலே, இந்தப் பூமியிலே, நாம் பார்க்கின்ற

ஒரு பரத்திற்குரிய அற்புதம். தேவனுடைய ஜீவனைப் பெற்ற ஒரு கூட்டம் மக்கள் இந்தப் பூமியிலே இருக்கின்றார்கள் என்பது பரத்திற்குரிய அற்புதம். மந்தையைப்பற்றிய பாடல் எழுதும்போது "மேய்ப்பன் நமக்கு ஜீவனைக் கொடுத்தார்," என்று எழுத வேண்டும். யோவான் 10ஆம் அதிகாரத்திலே அது இருக்கிறது.

நம்மைப் பேர் சொல்லி அழைத்தார்,
அன்பின் குரலைக் கேட்டோம்,
முன்செல்கின்றார் வழிகாட்டி,
பின்செல்வோம் அடியொற்றி.

அவர் தம்முடைய ஆடுகளைப் பெயர்சொல்லி அழைக்கிறார். நாம் அவருடைய குரலைக் கேட்டோம். மந்தை என்று சொன்னவுடனே "ஒட்டுமொத்தமாக எல்லாரும் வாங்க" என்று தேவன் அழைப்பதில்லை. ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து நம் ஒவ்வொருவரையும் தனிப்பட்ட விதத்திலே பெயர்சொல்லி அழைத்திருக்கிறார். ஆயிரம் பேர், கோடி பேர் இருக்கிற கூட்டத்திலே நாம் கடலிலே கரைக்கப்பட்ட பெருங்காயம்போல் இருக்கிறோம் என்று நாம் நினைக்க வேண்டாம். தேவன் தனிப்பட்ட விதத்திலே நம் ஒவ்வொருவரையும் பெயர் சொல்லி அழைத்திருக்கிறார்.அவர் நமக்கு முன்பாகச் செல்கிறார். நாம் அவருடைய அடியொற்றிப் பின்செல்கிறோம். அவருடைய அடிச்சுவடுகளில் நம்முடைய அடிகளை வைத்து நாம் நடப்பதுதான் அடியொற்றி நடப்பதாகும்.

பசும்புல் மேய்ச்சலும் ஒன்றே,
பருகும் நீரும் ஒன்றே,
பரம விருந்தும் ஒன்றே,
பங்குறும் கிறிஸ்து ஒன்றே.

அவர் நம்முடைய பசும்புல் மேய்ச்சலாய், நாம் பருகும் தண்ணீராய், நம்முடைய பரம விருந்தாய் இருக்கிறார். இவைகளெல்லாம் தேவன் நமக்குச் செய்த இரட்சிப்பின் நன்மைகள்.

மந்தைக்காய்த் தம் இரத்தம் சிந்தும்
அன்பின் சிகரம் கண்டோம்!
அன்பு கொண்டு சோதரர்க்காய்
நாமும் நம்மை ஊற்றுவோம்.

யோவான் 10யிலே இந்த எண்ணம் இருக்கிறது. நல்ல மேய்ப்பன் தன் ஆடுகளுக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிறான். ஒருவன் தன் நண்பர்களுக்காக ஜீவனைக் கொடுக்கிற அன்பைவிட மிக உயர்ந்த அன்பு இந்த உலகத்திலே இல்லை. ஆகவே, மந்தைக்காய்த் தம் இரத்தம் சிந்தும் அன்பின் சிகரம் கண்டோம். இது எப்படிப்பட்ட அன்பு? இதுதான் அன்பின் சிகரம். இதற்கு நிகராய் வேறு எதுவும் இல்லை. ஆகவே, அன்புகொண்டு சோதரர்களுக்காய் நாமும் நம்மை ஊற்றுவோம். தேவனுடைய மக்களுடைய, தேவனை அறியாதவர்களுடைய நிலைமையை, தேவையை, குறைச்சலை அறிந்து கொள்ள அந்தத் திறமையை நாம் பெற்றுக்கொள்ளவேண்டும். அப்படிப்பட்ட இருதயம் நமக்கு இருக்க வேண்டும்.

சோதரர்கள் ஒருமித்து
வாழ்வது நன்மை, இன்பம்!
ஜீவனும், ஆசீரும் தங்கும்
தேவனின் இல்லம் எங்கும்.

எசேக்கியேல் 34ஆம் அதிகாரத்தை பத்து தடைவை வாசித்துப் பாருங்கள். முழு அதிகாரத்தையும் நீங்கள் பிறகு வாசியுங்கள். இப்போது எசேக்கியேல் 34ஆம் அதிகாரம் முதல் வசனத்தை மட்டும் வாசிப்போம். "கர்த்தருடைய வார்த்தை எனக்கு உண்டாகி அவர் மனுபத்திரனே இஸ்ரயேலின் மேய்ப்பருக்கு விரோதமாகத் தீர்க்கதரிசனம் உரை". பத்துமுறை என்று சொன்னவுடனே நான் உணர்ச்சிவசப்பட்டு சொல்லிவிட்டதாக நீங்கள் நினைக்கவேண்டாம். பத்து தடவை நீங்கள் வாசியுங்கள். தேவன் உங்களோடு பேசுவார்.

அங்கு அவர் மந்தைக்கு விரோதமாய்த் தீர்க்கதரிசனம் உரைக்கிறார். கொழுத்த ஆடுகள் இளைய ஆடுகளை அடிக்கின்றன என்று எசேக்கியேல் தீர்க்கதரிசனம் உரைக்கிறார். கொழுத்த ஆடு மேய்ச்சலைத் தின்றுவிட்டு, மெலிந்த ஆடுகள் சாப்பிட முடியாதவாறு அந்த மேய்ச்சலையெல்லாம் குலைத்

துப்போடுகிறது, தண்ணீரைக் கலக்கிப்போடுகிறது. "நீ இப்படிச் செய்யலாமா?" என்று மேய்ப்பனைப் பற்றி மட்டுமல்ல, கொழுத்த ஆடுகளைப்பற்றியும் பேசுகிறார்.

"நான் கொழுத்த ஆடு அல்ல," என்று நாம் நினைக்கலாம். அருமையான பரிசுத்தவான்களே! போது மான கிறிஸ்துவை நம்முடைய வாழ்க்கையிலே தேவன் வழங்கியிருக்கிறார். மற்றவர்களுக்குப் பகிர்ந்து கொடுக்கும் அளவுக்கு நம்மிடத்தில் கிறிஸ்து இருக்கிறார். "நான் ஒன்றும் அவ்வளவு நல்ல கிறிஸ்தவன் இல்லை," என்று நீங்கள் சொல்லலாம். கிறிஸ்துவை மிகச் சுலபமாகப் பகிர்ந்துகொடுக்க நான் ஒரு காரியம் சொல்கிறேன். உங்கள் வீட்டிலுள்ள குளிர்சாதனப் பெட்டியைத் திறந்துவையுங்கள்; உங்கள் சமையலறையைத் திறந்து தேவனுடைய மக்களுக்கும், தேவனை அறியாதவர்களுக்கும் உணவு கொடுங்கள். இது உங்களால் முடியுமா? "ஒருவேளை நாம் சாப்பிடக் கூப்பிட்டு, சாப்பிட்டபிறகு அவர்கள் இயேசுகிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளவில்லையென்றால் என்ன செய்வது!" என்று கணக்குப் போடாதீர்கள்.

*2 இராஜாக்கள் 4ஆம் அதிகாரத்திலே எலிசாவைப்பற்றி எழுதியிருக்கிறது.* எலிசா சூனேம் என்கிற ஊரின் வழியாகப் போக்கும் வரத்துமாக இருக்கிறார். அந்த ஊரிலே ஒரு கனத்திற்குரிய பெண், செல் வம் நிறைந்த ஒரு பெண், இருக்கிறாள். எலிசா அப்படி அங்கு போக்கும் வரத்துமாக இருக்கும்போது அந்தப் பெண்ணின் வீட்டிலே அவர் சாப்பிட்டுவிட்டுப் போவது வழக்கம். அந்தப் பெண் ரொம்ப ஞானமுள்ள, மிகவும் மதிப்புடைய பெண். ஒருநாள் அவள் தன்னுடைய கணவனிடத்தில், "இதோ நம்மிடத்தில் எப்போதும் வந்துபோகிற தேவனுடைய மனிதனாகிய இவர் பரிசுத்தவான் என்று காண் கிறேன்," என்று சொன்னாள். விசுவாசிகள் ஒரு வீட்டிற்குப் போக்கும் வரத்துமாக இருந்தால், ஒரு அவிசுவாசியினுடைய வீட்டிற்குப் போக்கும் வரத்துவமாக இருந்தால் எந்தப் பிரசங்கமும் பண்ணாமல் அவர்கள், "நம்மிடத்தில் அடிக்கடி வந்துபோகிற இந்த மனிதர் ஒரு தேவனுடைய மனிதன் அல்லது பரிசுத்தவான் என்று காண்கிறேன்," என்று சொல்வார்களா?

இதைத்தான் அப்போஸ்தலனாகிய பவுல் "கிறிஸ்துவுக்குள் எப்பொழுதும் எங்களை வெற்றிசிறக்கப் பண்ணி, எல்லா இடங்களிலேயும் எங்களைக்கொண்டு கிறிஸ்துவை அறிகிற அறிவின் நறுமணத்தை, வாசனையை, வெளிப்படுத்துகிற, விளங்கப்பண்ணுகிற தேவனுக்கு ஸ்தோத்திரம்" *(2 கொரி. 2:14)* என்று சொல்கிறார். "ஆண்டவரே, பேசுவதற்கு வாய்ப்பில்லாத ஒரு சூழ்நிலையிலும்கூட, கிறிஸ்துவை அறிகிற அறிவின் நறுமணம் அல்லது சுகந்தவாசனை என்னிடமிருந்தும், எங்களிடமிருந்தும் வீசவேண் டும்," என்பது நம்முடைய இருதயத்தின் ஒரு கதறுதலாக இருக்க வேண்டும். ஆமென். இதற்கு அர்த்தம் "நாங்கள் பேசமாட்டோம்" என்பதல்ல.

"இந்த மனிதன் சும்மா சாப்பிட்டுவிட்டுப் போனால் மட்டும் போதாது. நாம் மெத்தையின்மேல் ஒரு சிறிய அறைவீட்டைக் கட்டி, அதில் அவருக்கு ஒரு கட்டிலையும், மேஜையையும், நாற்காலியையும், குத்துவிளக்கையும் வைப்போம். அவர் நம்மிடத்தில் வரும்போது அங்கே தங்கலாம்," என்று அவள் சொல்கிறாள். இது எலிசாவினுடைய இருதயத்தை ரொம்பத் தொட்டுவிடுகிறது. "இந்தப் பெண் நமக்கு உணவு கொடுத்து விருந்தோம்பல் செய்வது மட்டுமல்ல. நாம் இளைப்பாறிப்போவதற்கு ஒரு அறை யையே கட்டிவிட்டாளே!" என்று நெகிழ்ந்துவிடுகிறார். அவளுக்கு ஏதாவது குறைச்சலோ அல்லது தேவையோ இருக்கிறதா என்பதை அவர் அறிந்துகொள்ள விரும்பினார். "இதோ இப்படிப்பட்ட சகல சலக்கரணையோடும் எங்களை விசாரித்துவருகிறாயே, உனக்கு என்ன செய்ய வேண்டும்? இராஜா வினிடத்திலாவது, சேனாபதியினிடத்திலாவது உனக்காக நான் பேச வேண்டிய காரியம் உண்டோ?" என்று கேட்டார். இவர் இராஜா, சேனாபதிபோன்ற ரொம்ப உயர்ந்த இடங்களிலே தொடர்பு வைத்திருக் கிறார் என்று தெரிந்து அந்தப் பெண் அவருக்கு சோறு கொடுத்து விருந்தோம்பல் செய்யவில்லை, மேலறை கட்டவில்லை. அறையெல்லாம் கட்டினபிறகுதான் அவர் அப்படிக் கேட்கிறார். அந்தப் பெண், "எனக்கு ஒன்றும் வேண்டாம். நான் என் ஜனத்தின் மத்தியிலே சுகமாய் வாழ்கிறேன்," என்று சொல் கிறாள்.

கனத்திற்குரியவன் என்பவன் எப்போது பார்த்தாலும் "எனக்கு அது இல்லை, இது இல்லை" என்று புலம்பிக்கொண்டிருப்பவன் இல்லை. அவன் எப்போதும் திருப்தியாயிருக்கிறான்.

தாவீதாக இருந்தாலும் சரி, பவுலாக இருந்தாலும் சரி. "எல்லாம் எனக்குக் கிடைத்தது. பரிபூரணமும் உண்டாயிருக்கிறது. எனக்கு ஒரு குறையும் இல்லை. என்னுடைய குறைச்சலினால் நான் இப்படிப் பேசுகிறது இல்லை" என்றுதான் சொன்னார்கள்.

அந்தப் பெண்மணி அப்படிச் சொன்னவுடன் எலியா தன் வேலைக்காரனாகிய கேயாசியிடம், “இவளுடைய வீட்டிலே ஏதாவது குறைச்சல் இருக்கிறதா பார்,” என்று சொல்கிறான். “அவளுக்குப் பிள்ளை இல்லை. அவளுடைய கணவனும் பெரிய வளதுள்ளவன்,” என்று அவன் சொல்கிறான்.

**தேவைகளையும், குறைச்சல்களையும் அறிதல்**

இதை எதற்காகச் சொல்கிறேன் என்றால் தேவனுடைய மக்களாகிய நாம் நம்முடைய சதோதர சகோதரிகளுடைய, நம்முடைய உறவினர்களுடைய, நம்முடைய நண்பர்களுடைய, நம்மோடு உடன் வேலை பார்ப்பவர்களுடைய, நம்மோடு தொடர்புக்கு வருகிறவர்களுடைய குறைச்சல் என்னவென்பதைக் கண்டு பிடிக்க விரும்ப வேண்டும். எதற்காகக் கண்டுபிடிக்க வேண்டும்? ஆரோக்கியமற்ற ஒருவகையான ஆவலை நான் சொல்லவில்லை. அதாவது சிலருக்கு எல்லாரைப்பற்றியும் தெரிந்துகொள்ள வேண்டும் என்ற ஆரோக்கியமற்ற, பிறர் காரியங்களில் தலையிடுகிற குணம் இருக்கும். மற்றவர்களுடைய சம்பளம் எவ்வளவு, அவர்கள் வங்கியில் எவ்வளவு நிரந்தர வைப்பு நிதி வைத்திருக்கிறார்கள், எவ்வளவு தொடர் வைப்புத்தொகை வைத்திருக்கிறார்கள், வீட்டுக்கு மாதாமாதம் எவ்வளவு கடன்தொகை கட்டுகிறார்கள்போன்ற காரியங்களைத் தெரிந்துகொள்வதில் மிகவும் ஆர்வமாக இருப்பார்கள். நான் இதுபோன்ற தகவல்களைத் தெரிந்துகொள்வதைப்பற்றிச் சொல்லவில்லை. இதுபோன்ற தகவல்களைத் தெரிந்துகொள்ளக் கூடாது, தெரிந்துகொள்ள ஆசைப்படவும் கூடாது. கூடுமானவரை மற்றவர்களைப் பற்றிய விவரங்களைத் தெரிந்துகொள்ள நாம் ஆசைப்படக் கூடாது. எந்த அளவுக்கு மற்றவர்களைப் பற்றிக் குறைவாகத் தெரிந்துகொள்கிறோமோ அந்த அளவுக்கு நல்லது.

ஆனால், தேவனுடைய மக்களுக்கு ஒரு குறைச்சல் இருக்கிறது; அதைப் பூர்த்திசெய்ய நாம் ஏதாவது செய்ய முடியும் என்றால், “ஆண்டவரே, நான் அந்தக் குறைச்சலை அறிந்துகொள்ள விரும்புகிறேன்,” என்று ஜெபிக்க வேண்டும். அந்தக் காரியத்தில், “நான் மற்றவர்களைப்பற்றி எதுவுமே தெரிந்துகொள்ள விரும்பவில்லை,” என்று நம்முடைய கண்களை மூடிக்கொள்ளக் கூடாது. இல்லை, இல்லை. “அது தெரிந்தால் நான் அவர்களுக்கு எந்த உதவியும் செய்ய முடியாது,” என்றால் நான் அதைத் தெரிந்துகொள்ள விரும்பவில்லை.

ஒரு வயதான மூதாட்டி தன்னுடைய மகள் வீடு கட்டும்போது வீடு கட்டுவதற்கு உதவி செய்வதற்காகத் தன்னுடைய நிலத்தை விற்கிறாள், பரம்பரை நிலத்தை விற்கிறாள். விற்று, வீடு கட்டுகிற தன்னுடைய மகளுக்கு உதவி செய்கிறாள். இந்த வயதான மூதாட்டி எந்தத் தேவாலயத்தில் அல்லது சபைக்கு சென்று தொழுதுகொள்கிறாளோ அந்த சபையினுடைய போதகருக்குத் தெரியவருகிறது. போதகர் வந்தார். “எங்கே தசமபாகம்?” என்று கேட்டார். அந்த மூதாட்டி கண்ணீர் வடிக்கிறாள். “போதகனுடைய மனம் இரவு பகலும் கர்த்தருடைய வேதத்தில் தியானமாயிருந்து எப்போதும் கர்த்தரையே நினைத்துக்கொண்டிருக்கிறதா அல்லது யார் யார் எங்கெங்கே எந்த நிலத்தை விற்றார்கள், எந்த வீட்டை வாங்கினார்கள் என்பதிலே இருக்க வேண்டுமா?” என்று கேட்டேன்.

என்னோடு வேலைபார்த்த ஒரு சகோதரன் சொன்ன ஒரு காரியத்தைச் சொல்லுகிறேன். அவர்கள் வீட்டில் ஏ.சி. வாங்கினார்கள். ஜெபம் பண்ணுவதற்கு பாஸ்டரைக் கூப்பிடவில்லை என்று அவருக்கு ரொம்ப கோபம்.

“உங்கள் வருவாய்க்கு உட்பட்டு மின்சாரப் பில் கட்ட முடியுமா என்று பார்த்து ஏ.சி போட்டுக் கொள்ளுங்கள்; கடனில் வாங்காதிருங்கள்,” என்ற ஒரேவொரு நல்ல ஆலோசனையை மட்டும்தான் தேவனுடைய மக்களாகிய ஒருவருக்கொருவர் கொடுக்க வேண்டுமேதவிர, தேவையற்ற காரியங்களில் தலையிடக்கூடாது. கூடுமானவரை நம்முடைய கடனை எவ்வளவு குறைத்து வாங்க வேண்டுமோ அவ்வளவு குறைத்து வாங்க வேண்டும் என்று வேண்டுமானால் சொல்லலாம். அதுபோல கடன்வாங்கி வீடு கட்டுகிறோம் என்று வைத்துக்கொள்வோம். வாங்கின கடனைவிட வீட்டினுடைய மதிப்பு அதிகமாக இருக்க வேண்டும். எப்போது நம்மால் கடனைத் திருப்பிச்செலுத்த முடியவில்லையோ அல்லது “எல்லாவற்றையும் போட்டுவிட்டு நீ என்னைப் பின்பற்ற வேண்டும்,” கர்த்தர் சொல்கிறாரோ அப்போது அந்த வீட்டை விற்று, எல்லாக் கடனையும் அடைத்துவிட்டு ஆபிரகாமைப்போல தேவனைப் பின்பற்றுவதற்கு நாம் ஆயத்தமாக இருப்போம். வீடு வாங்கியிருக்கிறோம் என்பதற்காக நாம் கடைசிவரை வீட்டை வைத்திருக்க வேண்டும் என்கிற அவசியம் இல்லை. தேவனுடைய மக்கள் யாராவது வீடு வாங்க விரும்பினால் மனமகிழ்ச்சியோடு வீடு வாங்குங்கள். ஆனால், கர்த்தர் அதை எப்போது விற்கச் சொல்கிறாரோ அப்போது அதை மகிழ்ச்சியோடு விற்றுவிட்டு, “கர்த்தர் கொடுத்தார். கர்த்தர் எடுத்தார். கர்த்தருடைய பரிசுத்த நாமத்திற்கு ஸ்தோத்திரம். அல்லேலூயா!” என்று யோபுவினுடைய வசனத்தை நீங்கள் பாடலாம். “ஓ! நான் கல் கல்லாகப் பார்த்துக் கட்டின வீடாயிற்றே!” என்று லோத்தின் மனைவி

யினுடைய பாடலைப் பாடாதிருங்கள். யோபுவின் பாடலைப் பாடுவோம். "ஐயோ நான் கட்டின வீடெல்லாம் கருகிப்போகிறதே!" என்று லோத்தினுடைய மனைவியின் பாடலைப் பாட வேண்டாம்.

அருமையான பரிசுத்தவான்களே! தேவனுடைய மக்களுடைய, தேவனற்ற மக்களுடைய, தேவைகளைக்குறித்து நம்முடைய இருதயம் விசாலமாக இருக்க வேண்டும். "அப்படிப்பட்ட திறமை எனக்கு இல்லை," என்று நீங்கள் நினைக்கலாம். இருதயம் இருந்தால் திறமையும் உண்டாகும். இருதயம் இல்லையென்றால் திறமை உண்டாகாது. எலிசாவுக்கு இருதயம் இருந்தது. ஆகவே, சூனேமியாளுடைய தேவையை, குறைச்சலை, கண்டுபிடிக்கிற திறமை அவனுக்கு இருந்தது.

அந்தத் திறமை குறைவுபடும்போது அவன் மனம் வருந்துகிறான். அவளுடைய பிள்ளை ஒருநாள் செத்துப்போனான். ஆவனை எலிசாவின் கட்டிலின்மேல் வைத்து, அந்த அறையைப் பூட்டிவிட்டு, அவள் எலிசாவைப் பார்க்கப் போகிறாள். தூரத்தில் அவள் வருவதைக் கண்டு, எலிசா தன் வேலைக்காரனாகிய கேயாசியைப் பார்த்து, "அதோ சூனேமியாள் வருகிறாள். நீ அவளுக்கு எதிர்கொண்டு ஓடி, நீ சுகமாயிருக்கிறாயா? உன் கணவன் சுகமாயிருக்கிறானா? அந்தப் பிள்ளை சுகமாயிருக்கிறதா என்று அவளிடத்தில் கேள்," என்றான். அவன் போய் விசாரிக்கிறான். அவள், "எல்லாம் சுகந்தான்," என்று சொல்கிறாள். ஆனால், அவள் உள்ளே வந்தவுடனே அவனுடைய கால்களைக் கட்டிப்பிடித்துக் கொள்கிறாள். கேயாசி அவளை விலக்க முற்படுகிறான். அப்பொழுது எலிசா, "அவளைத் தடுக்காதே. அவள் ஆத்துமா துக்கமாயிருக்கிறது. கர்த்தர் அதை எனக்கு அறிவியாமல் மறைத்துவிட்டார்," என்றான்.

ஏலி என்று இன்னொரு ஆசாரியன் இருந்தான். அவனுடைய காலத்தில் அன்னாள் என்கிற ஒரு பெண் மிகவும் துக்கத்தோடு கர்த்தருடைய சமுகத்தில் வந்து ஜெபிக்கிறாள். அவள் துக்கமாயிருக்கிறாள் என்று கண்டுபிடிக்கிற திறமை ஏலிக்கு இல்லை. அது மட்டும் இல்லை. அவள் குடித்து வெறித்திருக்கிறாள் என்று நினைத்து, அவளிடத்தில் போய் "நீ எம்மட்டும் இப்படி வெறித்திருப்பாய்?" என்று கேட்கிறான். அவள், "உமது அடியாளைப் பேலியாளின் மகள் என்று நினைத்துவிடாதேயும். நான் துக்கத்தினால் கர்த்தருடைய சமுகத்தில் என் இருதயத்தை ஊற்றினேன்," என்று மிகவும் தாழ்மையாய் காரியத்தை விளக்குகிறாள். அப்போது ஏலி மிகவும் ஆவிக்குரியவராகி, "கர்த்தர் உன்னுடைய வேண்டுதலை நிறைவேற்றுவார்," என்று சொல்லிவிட்டுப் போகிறார். அப்போதுகூட "ஓ! இவளுடைய இருதயத்தின் துக்கத்தை கர்த்தர் என்னிடமிருந்து மறைத்துவிட்டார்," என்றெல்லாம் ஏலி சொல்லவில்லை. ஏனென்றால் அப்படி அவன் கர்த்தருடைய இருதயத்தை அறிந்து ரொம்ப நாள் ஆயிற்று.

இது என்னுடைய இரண்டாவது குறிப்பு. நாம் செய்துகொண்டிருக்கிறது சாதாரண வேலை அல்ல. நாம் ஒருவேளை ஐம்பதுபேராலான ஒரு சமுதாயம் என்றால் "தேவனே, உம்முடைய பிள்ளைகளுடைய நிலைமைக்கும், தேவைக்கும், குறைச்சலுக்கும் கிறிஸ்துவைக்கொண்டு பூர்த்திசெய்கிற திறமையை எனக்குத் தாரும்," என்பது நம்முடைய இருதயத்தின் கதறுதலாக இருக்க வேண்டும். தேவனற்ற மக்களைக்குறித்து குறிப்பாய் ஜெபிக்க வேண்டும். இது நம்முடைய இயற்கையான ஒரு திறமை அல்ல. நாம் ஜெபிக்கும்போது பரிசுத்த ஆவியானவர் அப்படிப்பட்ட தேவைகளையும், குறைச்சல்களையும், நிலைமையையும் நமக்கு உணர்த்துவார்.

முதலாவது குறிப்பு, நாம் கட்டியெழுப்புகிறோம். தேவனுடைய பார்வையிலே முக்கியமான, மதிப்புள்ள, விலையேறப்பெற்ற ஒன்றைக் கட்டியெழுப்புகிறோம். இது வெறுமனே நம்முடைய இயற்கையான ஞானத்தையும், இயற்கையான அறிவையும், இயற்கையான பலத்தையும், இயற்கையான திறமையையும் வைத்து செய்கிற ஒரு காரியம் இல்லை. பரிசுத்த ஆவியானவர் நம்முடைய இருதயங்களிலே வைப்பார்.

### மற்றவர்களுக்காக நம்மை ஊற்றுதல்

ஒன்றை நான் சொல்ல வேண்டும். நம்மை இழக்காமல் நாம் மற்றவர்களுக்குக் கிறிஸ்துவை வழங்குவது சாத்தியமே இல்லை. நம்மை இழக்காமல் நாம் கிறிஸ்துவை மற்றவர்களுக்கு வழங்குவது, கிறிஸ்துவைக்கொண்டு மற்றவர்களுடைய தேவைகளைப் பூர்த்தியாக்குவது சாத்தியமே இல்லை. ஒரு மனிதனுடைய வாழ்க்கையில்-அவன் தேவனை அறியாத மனிதனோ, தேவனை அறிந்த மனிதனோ-ஒரு தேவையை, ஒரு குறைச்சலை, நாம் காணும்போது முதலாவது நாம் ஜெபிக்க வேண்டும். அவர்களுடைய நிலை என்ன என்பதை அறிய நாம் ஜெபிக்க வேண்டும். அவர்களுடைய தேவையும், குறைச்சலும் என்னவாக இருந்தாலும், ஏதோவொரு விதத்தில் நம்மை இழந்துதான் நாம் கிறிஸ்துவை மற்றவர்களுக்கு வழங்க முடியும்.

அன்புகொண்டு சோதரருக்காய் நாமும் நம்மை ஊற்றுவோம் என்று அந்தப் பாடல் வரிகள் சொல்லு கின்றன. இப்படி எழுதலாமா? ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துதானே தம்மை நமக்காக ஊற்றியிருக் கிறார். நாமும் நம்மை ஊற்றுவோம் என்று எந்த அடிப்படையிலே எழுதலாம்? பிலிப்பியர் 2ஆம் அதிகாரத்திலும், 2 தீமோத்தேயு 4ஆம் அதிகாரத்திலும் பவுல் தன்னைப்பற்றி சொல்லும்போது, "நான் இப்பொழுதே பானபலியாக வார்க்கப்பட்டுப்போகிறேன். நான் தேகத்தைவிட்டு பிரியும் காலம் வந்தது. நல்ல போராட்டத்தைப் போராடினேன். ஓட்டத்தை முடித்தேன். விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன்," என்று எழுதுகிறார். பிலிப்பியர் 2ஆம் அதிகாரத்திலே "உங்கள் விசுவாசமாகிய பலியின்மேல் நான் பானபலியாக ஊற்றப்பட்டுப் போனாலும்," என்று எழுதுகிறார்.

தேவனுடைய மக்களுடைய ஒரு குறைவை, ஒரு தேவையை, நாம் பூர்த்தியாக்க வேண்டுமென்றால் ஏதோவொரு விதத்திலே நாம் நம்மைப் பலியாக்க வேண்டும். நம்முடைய நேரம், நம்முடைய உழைப்பு, நம்முடைய பொருள்வளங்கள், நம்முடைய வசதிகள், நம்முடைய வாய்ப்புகள்போன்ற அநேகக் காரி யங்களை இழக்கவேண்டியிருக்கும். தேவனுடைய சார்பாக தேவனுடைய மக்களைச் சேவிப்பதற்கு அவர்களுடைய தேவைகளையும், குறைச்சல்களையும் பூர்த்தியாக்குவதற்கு தேவன் எதையும் இழக்க நம்மைக் கேட்கலாம். பற்றிப்பிடித்துக்கொள்வது நமக்கு இலகுவாக இருக்கும். அப்போஸ்தலர் 20ஆம் அதிகாரத்திலே அப்போஸ்தலனாகிய பவுல் "வாங்குகிறதைப்பார்க்கிலும் கொடுப்பதே பாக்கியம் என்று நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து சொன்ன வார்த்தையை நினைவுகூரவும் நாம் உங்களுக்குப் போதித்தேன்," என்று கூறுகிறார்.

நாம் 50 பேர் கூடி வாழ்கிறோம் என்று வைத்துக்கொள்வோம். ஒரு தேவை என்று வரும்போது ஒருவர் கொடுக்கிறார், ஒருவர் பெறுகிறார்; ஒருவர் பெறுகிறார், இன்னொருவர் கொடுக்கிறார். இப்படியாகச் சிலர் கொடுப்பதும், சிலர் பெறுவதுமாக இருக்கிறார்கள். இப்படி கொடுக்கல்களையும், பெறுதல்களை யும் நாம் கூட்டிக்கழித்துப் பார்த்தால் கடைசியிலே கூட்டலாக இருக்க வேண்டுமா, கழித்தலாக இருக்க வேண்டுமா? என்னுடைய கேள்வி புரிகிறதா? கொடுத்தவைகள் எல்லாவற்றையும் கூட்டிப் பார்த்தால் அதிகமாக இருக்குமா அல்லது பெற்றதையெல்லாம் கூட்டிப்பார்த்தால் அதிகமாக இருக்குமா? தேவ னுடைய மக்கள் ஒரு 50 பேர் கூடி வாழ்கிறோம். கொடுத்தவைகளையெல்லாம் கூட்டிப்பார்த்தால் அதிகமாக இருக்க வேண்டும். எந்தவொரு சமுதாயத்திலே பெறுபவைகளையெல்லாம் கூட்டிப்பார்த் தால் அதிகமாக இருக்கிறதோ அந்த சமுதாயம் இன்னும் கட்டியெழுப்பப்படவில்லை. அங்கு வாங்கு வதைப்பார்க்கிலும் அல்லது பெறுவதைப்பார்க்கிலும் கொடுப்பதே பாக்கியம் என்று நம்முடைய கர்த்த ராகிய இயேசுகிறிஸ்து சொன்ன வார்த்தையை நினைவுகூரவில்லை என்று பொருள். அபகரிப்பது, பறிப்பது, பற்றிப்பிடிப்பது, இறுகப்பிடிப்பதுபோன்ற காரியங்களில் உலகத்து மக்கள் கைதேர்ந்தவர்கள். விடுவது, பகிர்ந்துகொடுப்பது, பரிமாறுவது, நமக்குரியதையும் விட்டுவிடுவது என்பது தேவனுடைய மக்களுடைய கோட்பாடு. பலியாக்குவது, பானபலியாக ஊற்றுவது, செலவிடுவது இதெல்லாம் தேவ னுடைய மக்களிடையே சர்வ சாதாரணமான காரியங்களாக இருக்க வேண்டும். அப்போஸ்தலனாகிய பவுல் சொல்வதைப்போல, "ஆத்துமாக்களுக்காகச் செலவுபண்ணவும், செலவுபண்ணப்படவும்" (2 கொரி. 12:15) நாம் ஆயத்தமாக இருக்க வேண்டும்.

நடைமுறைக்குரிய இன்னொரு காரியத்தைச் சொல்கிறேன். திட்டவட்டமாக, தீர்க்கமாக, மனமுவந்து நாம் எதையும் ஒதுக்கி வைக்காவிட்டால் பிறருக்காக, தேவனுடைய மக்களுக்காக, நாம் ஒருநாளும் எதையும் செலவிடவும் மாட்டோம், இழக்கவும் மாட்டோம், பலியாக்கவும் மாட்டோம், ஊற்றவும் மாட் டோம். திட்டமிட்டு, தீர்க்கமாக நாம் ஒதுக்கிவைக்க வேண்டும் என்று நான் சொல்லுகிறேன். அதாவது "இந்த மாதத்திலே இவ்வளவு பணத்தை தேவனுக்காக, தேவனுடைய மக்களுக்காக, தேவனுடைய மக்களின் தேவைகளுக்காக ஒதுக்கிவைக்கிறேன். இவ்வளவு நேரத்தை நான் ஒதுக்கிவைக்கிறேன். என்னுடைய இவ்வளவு உழைப்பை நான் ஒதுக்கி வைக்கிறேன். என்னுடைய மனதை இவ்வளவு நான் ஒதுக்கிவைக்கிறேன்," என்று நாம் தீர்க்கமாக முடிவெடுத்து ஒதுக்கிவைக்காவிட்டால் பெரும்பாலும் தேவனுக்காகவோ, தேவனுடைய மக்களுக்காகவோ நாம் செலவிட மாட்டோம்.

### 3. இசைந்து வாழ்தல்

மூன்றாவது குறிப்புக்கு வருகிறேன். நாம் இசைந்து வாழ வேண்டும் அல்லது இசைந்து இப்படிப்பட்ட பணிவிடையைச் செய்ய வேண்டும். இசைவு என்பது எளிதானது அல்ல. நான் உங்களை எச்சரிக் கிறேன். எனக்கும் அது எளிது அல்ல. உங்களுக்கும் அது எளிது அல்ல.

வேதியியலில் molecules உடைய structures எனக்கு ரொம்பப் பிடிக்கும். ஒரு அணு இங்கு இருக்கும், இன்னொரு அணு அங்கு இருக்கும். ஒரு single bond இருக்கும், ஒரு double bond இருக்கும். இதெல்

லாம் சேர்ந்து ஒரு வளையம் ஒன்று வரும். அந்தந்த அணு அந்தந்த இடத்திலே இருந்தால்தான் அந்த பொருள் உருவாகும். ஒவ்வொரு அணுவும் வெவ்வேறு இடத்திலே குதித்துக்கொண்டிருந்தால் அந்த பொருள் உருவாகாது.

அதுபோல தேவனுடைய மக்களாகிய நாம் கிறிஸ்துவை ஒருவருக்கொருவர் பரிமாறும்போதும் சரி, மற்றவர்களுக்குப் பரிமாறும்போதும் சரி, நாம் நமக்குரிய இடத்திலும், நமக்குரிய தடத்திலும் இருந்து நாம் அதைச் செய்ய வேண்டும். இதற்குப் பெயர்தான் இசைவு அல்லது பொருத்தம்.

சரீரம் ஒரு நல்ல எடுத்துக்காட்டு. ஒருவேளை ஒரு முழங்காலை நாம் மடக்கும்போது அதில் சம்பந் தப்பட்ட எல்லா எலும்புகளும், தசைநார்களும், நரம்புகளும் இசைந்து வேலைசெய்கின்றன. ஆவை களெல்லாம் சேர்ந்து ஒரு வேலை செய்யும்போது அந்த இடத்திற்கு அதிகமாக இரத்தம் பாய்கிறது.

தேவனுடைய மக்களிடையே இப்படிப்பட்ட இசைவு அவ்வளவு எளிதில் வருவது இல்லை. ஏனென் றால், நாம் இன்னும் உலகத்து எண்ணங்களை உடையவர்கள். “இந்த உலகத்திலே நான் ஒரு தலைவ னாக இருக்க வேண்டும்; எனக்குப் பேரும் புகழும் வேண்டும்; எனக்கு முக்கியத்துவம் வேண்டும்; எல்லாரும் நான் விரும்புவதைச் செய்ய வேண்டும் அல்லது என்னைக் கேட்டுச் செய்ய வேண்டும். கடைசியிலே என்னுடைய விருப்பந்தான் நிறைவேற வேண்டும்,” என்பது உலகத்தின் எண்ணம். இப் படிப்பட்டவர்கள் மாம்சத்திற்குரியவர்கள், இயற்கையானவர்கள்; இப்படிப்பட்டவர்களிடத்தில் சுயம் ஆளுகைசெய்கிறது. இப்படிப்பட்ட பல எதிர்மறையான காரியங்கள் நம்மிடத்திலே இருப்பதால் இசைந்து வாழ்வது எளிதாக வருவது இல்லை.

நாம் ஒரு மாபெரும் வேலையைச் செய்துகொண்டிருக்கிறோம் என்று நான் ஏன் சொல்லுகிறேன் என் றால் இசைவாக ஒன்றைக் கட்டியெழுப்புவது தேவனுடைய பார்வையிலே மிகவும் விலையேறப்பெற் றது. நம்மிடையே எந்தப் பெரிய அதிகாரியும் இல்லை. “நீங்கள் மற்றவர்களுக்காக இவ்வளவு நேரத் தைச் செலவிட வேண்டும்,” என்று நாம் யாரையும் கட்டாயப்படுத்துவதில்லை. கூட்டத்திற்கு நேரத்திற்கு வருவது என்பது நாம் தேவனுடைய மக்களுக்குச் செய்கிற ஒரு பணிவிடை.

“நீங்கள் உண்ண வரும்போது ஒருவருக்காக ஒருவர் காத்திருங்கள்” என்று 1 கொரிந்தியர் 11ஆம் அதிகாரத்திலே கர்த்தருடைய பந்தியைப்பற்றி பவுல் எழுதுகிறார். என்னைப் பொறுத்தவரை ரொம்ப தெளிவாய்ச் சொல்வதானால், “ஒருவரையொருவர் நீங்கள் கருத்தில் கொள்ளுங்கள்” என்பதுதான் அதன் பொருள். அது உணவல்ல. கிறிஸ்துவை நாம் பகிர்ந்துகொள்வதற்கு அது ஓர் அடையாளம். வெறுமனே உணவை நினைத்துக்கொள்ளக் கூடாது. இதுபோல கிறிஸ்துவில் என்னுடைய எல்லா வளங்களையும் பகிர்ந்துகொள்வதற்கு நான் விரும்புகிறேன் அல்லது ஆயத்தமாயிருக்கிறேன் என்ப தைக் காட்டுவது அந்த அன்பின் விருந்து அல்லது கர்த்தருடைய பந்தி.

ஒருவருக்காக ஒருவர் காத்திருப்பதுகூட இசைந்து வாழ்கிற வாழ்க்கையினுடைய ஒரு பங்கு. 10 மணிக்கு ஆரம்பிக்கிற கூட்டத்திற்கு ஒரு சகோதரன் 9.45க்கு வந்து காத்திருக்கிறான் என்றால் அவன் சகோதரர்களை அவ்வளவாய் மதிக்கிறான் என்று பொருள். யார் காத்திருக்கிறார்களோ அவர்கள் முக்கியத்துவம் குறைந்தவர்கள். யார் காக்க வைக்கிறார்களோ அவர்கள் முக்கியத்துவம் கூடினவர்கள். தலைவர் வரும்வரை தொண்டர்களெல்லாம் காத்திருப்பார்கள்.

கட்டாயத்தின்பேரிலே நாம் எந்த இசைவையும் பெற முடியாது. “நீங்கள் இவ்வளவு நேரத்தைச் செல விட வேண்டும்; இவ்வளவு பணத்தைச் செலவிட வேண்டும்,” என்று நாம் யாரையும் கட்டாயப்படுத்த முடியாது. ஒரு கூட்டம் ஏற்பாடு செய்கிறோம் என்று வைத்துக்கொள்வோம். “போக்குவரத்திற்கு, நம்முடைய உணவிற்கு, மற்ற தேவைகளுக்கு இவ்வளவு பணம் தேவைப்படுகிறது. ஒவ்வொருவரும் இவ்வளவு கொடுக்க வேண்டும்” என்று ஏற்பாடு செய்யலாமா? இது தேவனுடைய வழியா? இல்லை. ஆனால், இது நல்ல ஒரு பொருளாதார ஏற்பாடா? நல்ல பொருளாதார ஏற்பாடு. சிலபேருக்கு அதிகமான சுமையும், சிலபேருக்குக் குறைவான சுமை என்று வரக்கூடாது என்பதற்காக இந்த ஏற்பாடு செய்வார்கள்.

நற்செய்தியை எப்படி அறிவிக்க வேண்டும்? அதற்கு workshop நடத்துவார்கள். பதிவுத்தொகை வாங்கு வார்கள். இது நல்ல ஏற்பாடா? நல்ல ஏற்பாடுதான். ஆனால் 2 கொரி. 8, 9ஆம் அதிகாரங்களின்படி நல்ல ஏற்பாடு இல்லை. “இவ்வளவு செலவாகும்,” என்று நாம் சொல்ல வேண்டும். அவ்வளவுதான். “அதிகமாகச் சேர்த்தவனுக்கு மிஞ்சினதும் இல்லை; குறைவாய்ச் சேர்த்தவனுக்கு குறைவானதும் இல்லை”. நான் இதை விசுவாசிக்கிறேன். தேவனுடைய மக்களை நாம் கட்டாயமோ, நிர்ப்பந்தமோ பண்ணவேண்டிய அவசியம் இல்லை. “அவனவன் கட்டாயமாயும் அல்ல, விசனமாயும் அல்ல. தன்தன் மனதில் நியமித்தபடியே கொடுக்கக்கடவன்,” என்று பரிசுத்த ஆவியானவரையும், தேவனுடைய மக்கள்

கிறிஸ்துவை அனுபவிக்கிற அனுபவத்தையும் நாம் நம்பலாம். ஒருவரால் அதிகமாகக் கொடுக்க முடிய லாம்; இன்னொருவரால் குறைவாகத்தான் கொடுக்க முடியும். அதைப்பற்றி நாம் கவலைப்பட வேண் டாம்.

“இவர்தான் தலைவர். இந்தத் தலைவருக்கு எல்லாரும் கீழ்ப்படிய வேண்டும்,” என்று ஒரு புறம்பான ஏற்பாடு செய்துவிட்டால் எல்லாரையும் இசைவாக வாழவைப்பது எளிது. பரிசுத்த ஆவியினால் பெறப்படுகிற இசைவு என்றால் என்னவென்பதைத் தெரிந்துகொள்வதற்கு பவுல் பிலெமோனுக்கு எழுதின கடிதத்தை நீங்கள் வாசியுங்கள். அது ரொம்ப ஆழமான கடிதம் இல்லை. அங்கு கிறிஸ்துவின் சரீரத்தைப்பற்றி, புதிய எருசலேமைப்பற்றி, உலகத்தைப்பற்றி ஒன்றுமே இருக்காது. அது ஒரு தனிப்பட்ட கடிதம். பிலெமோனுக்கு பவுல் ஒரு கடிதம் எழுதுகிறார். “உன்னுடைய அடிமையாகிய ஒநேசிமு தப்பித்து ரோமாபுரிக்கு வந்தான். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்! ரோமாபுரியிலே அவன் என்னைச் சந்தித்தான். அவனுக்கு நான் கிறிஸ்துவை அறிவித்தேன். அவன் இப்பொழுது கிறிஸ்துவைப் பெற்று தேவனுடைய பிள்ளையாக மாறிவிட்டான். பிறகுதான் இவன் உம்முடைய அடிமை என்று தெரிய வந்தது. எனக்குப் பணிவிடை செய்வதற்கு ஒநேசிமுவை என்னோடேகூட வைத்துக்கொள்ள வேண்டு மென்று நான் விரும்புகிறேன. ஆனால் உம்முடைய அனுமதி இல்லாமல், உம்முடைய சம்மதம் இல்லா மல், நான் எதையும் செய்ய விரும்பவில்லை. ஆகவே, என் இருதயத்தைபோன்ற என் மகனாகிய ஒநேசிமுவை உம்மிடத்தில் அனுப்பிவைக்கிறேன். இவன் ஏதாவது உம்மிடத்தில் திருடியிருந்தால் அதைப் பொருட்படுத்தாதேயும். அதை என்னுடைய கணக்கிலே வைத்துக்கொள்ளும். நான் அதைக் கொடுத்துத் தீர்ப்பேன். ஆனால், நீர் உம்மையே எனக்குக் கொடுக்க வேண்டும் என்று நான் ஞாபகப் படுத்த வேண்டிய அவசியம் இல்லை,” என்று பவுல் எழுதுகிற இந்த ஆவியை நீங்கள் பார்க்க வேண் டும். பவுலாகவே இருந்தாலும் சரி, தேவனுடைய மக்களுடைய இசைவை ஆவியில்தான் பெற வேண்டும்.

நான் சொன்ன மூன்று குறிப்புகளையும் இப்போது சுருக்கிச் சொல்கிறேன். நம்முடைய தலைப்பு. “நாம் பெரிய வேலையை செய்துகொண்டிருக்கிறோம்”. தேவனுடைய மக்கள் நீங்கள் இதை நிர்விசாரமாக எடுத்துக்கொள்ளக் கூடாது. “ஆ! ஏதோ ஞாயிற்றுக்கிழமை கூடுகைக்குப் போகிறோம். அவ்வளது தான்,” என்று நினைக்கக்கூடாது.

முதலாவது, “நாம் கட்டியெழுப்புகிற வேலையைச் செய்துகொண்டிருக்கிறோம்,” என்று சொன்னேன். இந்த முழுப் பிரபஞ்சத்திலும், கிறிஸ்துவின் சரீரத்தைக் கட்டியெழுப்புவது, கிறிஸ்துவின் மணவாட் டியை அலங்கரிப்பது, புதிய எருசலேமைக் கட்டியெழுப்புவதைபோன்ற அற்புதமான வேலை, முக்கியத் துவம்வாய்ந்த வேலை வேறு எதுவும் இல்லை. அதை நாம் செய்துகொண்டிருக்கிறோம். தேவனிடத்தில் இதற்குரிய ஞானத்தையும், கிருபையையும் நாம் கேட்க வேண்டும். இரண்டாவது, தேவனுடைய மக்க ளுக்கும், தேவனற்ற மக்களுக்கும் அவர்களுடைய தேவைகளுக்கும், அவர்களுடைய குறைச்சல்களுக் கும், அவர்களுடைய நிலைமைக்கும் நாம் கிறிஸ்துவைக்கொண்டு பூர்த்தியாக்கும்போது நாம் கட்டி யெழுப்புகிறோம். மேலோட்டமாய்ப் பார்த்தால், அது பணமாக இருக்கலாம், சிறு உதவியாக இருக்க லாம், செய்கிற ஒரு வேலையாக இருக்கலாம். ஆனால், அது உள்ளாகக் கிறிஸ்துவைப் பரிமாறு வதாகும். மூன்றாவது, தேவனுடைய மக்கள் இசைந்துதான் இப்படிப்பட்ட குறைச்சல்களை கிறிஸ்து வைக்கொண்டு பூர்த்திசெய்ய முடியுமேதவிர, தனிப்பட்ட விதத்தில் நம்மால் செய்ய முடியாது. நாம் ஒருவருக்கொருவர் பூர்த்திசெய்வதாக இருந்தாலும் சரி, நாம் சேர்ந்து, மற்றவர்களுக்கு அவர்களுடைய குறைச்சல்களை பூர்த்திசெய்வதாக இருந்தாலும் சரி, இசைவாக மட்டுமே நாம் செய்ய முடியும். எல்லாவற்றையும் நாம் கேட்பது மட்டுமல்ல. இவைகளை நாம் செயலாக்குவதற்கு, நடைமுறைப்படுத்து வதற்கு பல வாய்ப்புகள் உள்ளது. நான் முதலாவது சொன்னதுபோல எனக்கு வயிற்றுபாட்டையும், என் பிள்ளைகளின் எதிர்காலத்தையும் கொடுப்பதல்ல. அதை தேவன் தருவார். ஆனால், தேவனுடைய மாபெரும் வேலையிலே பங்காளிகளாய், பங்குள்ளவர்களாய் மாறுகிறோம். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.